பாடம் 2

# உதவ வாருங்கள்!

***உன் வீட்டிற்கு விருந்தினர் வந்தால் அவர்களை நீ உண்மையாகவே விருப்பத்துடன் ஏற்றுக்கொள்வாயா? அவரை மகிழ்ப்பண்ணுவதற்காக உனது வீட்டினருடன் சேர்ந்து என்னவெல்லாம் செய்வாய்? மிகுந்த அன்புடன் விருந்தோம்பல் செய்த ஒரு பெண்ணைப்பற்றிப் பார்ப்போமா?***

பவுல் ஒருநாள் இரவில் ஒரு தரிசனம் கண்டார். தனது தரிசனத்திலே மக்கெதோனியா தேசத்து மனிதன் ஒருவனைக் கண்டார். அவன், “நீர் மக்கெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவி செய்ய வேண்டும்” என்று பவுலை மிகவும் வேண்டிக்கொண்டான்.

அந்தத் தரிசனத்தைக் கண்ட பவுல், மக்கெதோனியாவிற்குப் போய் தேவனைப் பற்றிய நற்செய்தியைச் சொல்லுமாறு தேவன் தங்களை அழைக்கிறார் என்பதை (நன்றாக) உணர்ந்துகொண்டார்.

எனவே, சீலாவைப் பவுல் அழைத்தார். சீலாவிடம் பவுல், தான் கண்ட தரிசனத்தைப் பற்றிச் சொன்னார். தேவனுடைய ஊழியத்தை, வேறுதேசத்திலும் செய்யப்போவதற்காகச் சந்தோஷப்பட்டனர். உற்சாகமாகவும் மகிழ்ச்சியாகவும் இருவரும் மக்கெதோனியாவுக்குப் புறப்பட்டனர்.

துரோவா என்ற பட்டணத்துக்குக் கப்பல் ஏறினார்கள். அப்படியே பயணம் செய்து மக்கெதோனியா நாடுகளில் ஒன்றிற்குத் தலைமையான ‘பிலிப்பி’ எனும் பட்டணத்துக்கு வந்தார்கள். சில நாட்கள் அங்கே தங்கியிருந்தார்கள்.

ஓய்வுநாள்தோறும் பட்டணத்துக்கு வெளியே ஆற்றோரமாகச் செல்வார்கள். அங்கு வழக்கமாக ஜெபம்பண்ணுகிற இடத்திலே உட்காருவார்கள். அங்கே கூடிவருகின்ற



## மனன வசனம்

**அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்.**

**எபிரெயர் 13:2.**

பெண்களிடம் தேவனைப் பற்றி மிகவும் அருமையாகப் பிரசங்கிப்பார்கள்.

அந்தப் பெண்களில் லீதியாள் என்னும் பெயருடைய ஒரு பெண் இருந்தாள். அவள் தேவனை வணங்குகிறவளாயிருந்தாள். இரத்தாம்பரம் விற்பது அவளது தொழில். லீதியாள் தியத்தீரா ஊரைச் சேர்ந்தவள். பவுல் தேவனைப் பற்றி வல்லமையாகப் பிரசங்கித்தது லீதியாளின் உள்ளத்தில் கிரியை செய்தது. தேவன் லீதியாளின் இதயத்தைத் திறந்தருளினார்.

லீதியாள் மிகவும் ஆர்வமாக தேவனின் வார்த்தைகளைக் கேட்டு மனதில் பதித்துக்கொண்டாள். குடும்பத்தினருக்கும் அவற்றைக் கூறிக்கொண்டேயிருந்தாள். ஒருநாளிலே லீதியாளும் அவளது வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றார்கள். அதன் பின்னரும் தொடர்ந்து பவுலின் போதகத்தைக் கேட்டு வந்தனர்.



பவுலிடம் ஒருநாள் லீதியாள், "நீங்கள் என்னைக் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவள் என்று எண்ணினால், என் வீட்டிலே வந்து தங்கியிருங்கள். நாங்கள் நல்லமுறையில் உங்களைக் கவனித்துக்கொள்வோம். தயவுசெய்து வாருங்கள்" என்று பவுலிடம் கெஞ்சினாள்.

மிகுந்த அன்புடன் அவர்களை வருந்தி அழைத்தாள். லீதியாள் மற்றவரால் மதிக்கப்படக்கூடிய ஒரு வியாபாரியாக இருந்தாள். தரம்மிகுந்த இரத்தாம்பர ஆடைகளையே அவள் விற்றுவந்தாள்.

தேவனின் மேல் மிகுந்த அன்பு வைத்திருந்தாள். அதுவுமில்லாமல் பவுல் மூலமாகத் தான் கற்றுக்கொண்ட நற்செய்தி அவளது உள்ளத்திலே மிகுந்த ஆனந்தத்தை ஏற்படுத்தி இருந்தது.

# செய்தி

**தேவஅன்பை யாவரிடமும் சொல்லும்போது தேவனுக்கு நான் சேவைசெய்கிறேன்.**

பவுலின் மூலம் தான் பெற்றுக்கொண்ட சந்தோஷத்தையும் சமாதானத்தையும் தேவனை அறியாத மற்ற மக்களும் அறிந்துகொள்ள வேண்டும் என விரும்பினாள். தான் சந்திக்கும் ஒவ்வொரு நபரிடமும் லீதியாள் அன்புமிக்க தேவனைப்பற்றிய நற் செய்தியைச் சொன்னாள்.

லீதியாள் அவ்வாறு சொன்னதினாலே அவர்களும் ஆண்டவரைப் பற்றி நன்கு அறிந்து கொள்ள முடிந்தது.

என் பிரியமான பிள்ளையே!

நீயும் லீதியாளைப் போன்று தேவனுக்காகவே வாழ்வாயா? தேவனின் அன்பை,தேவனைப் பற்றிய நற்செய்தியை யாவரிடமும் சொல்வாயா?

சொல். தேவன் உன்னை ஆசீர்வதிப்பார்!

***செய்முறை:* இங்கே தேவனுடைய பிள்ளைகள் சிலரது பெயர் எழுத்து மாற்றப்பட்டு ஒழுங்கற்று இருக்கின்றன. ஒழுங்குப்படுத்தி கோட்டில் எழுது.**

**1. ள் தீ யா லீ** ______________________

**2. ல் வு ப** ______________________

**3. லா சீ** ______________________

**புதிர் ௨**

